தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 ஆகஸ்டு 2003

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இந்திய விடுதலை நாள் விழா

தமிழ்ப் பல்கலைக்கழக வாகை வளாகத்தில், இந்திய விடுதலை விழா 15.08.2003 காலை, சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் காலை 8.30 மணி தேசியக் கொடியை ஏற்றினார்.



இந்த இனிய நிகழ்ச்சியின்போது, தமிழ்ப் பல்கலைக்கழகச் சிறப்புநிலை ஊர்தி ஒட்டுநர் திரு சோ.வடிவேலு அவர்கள் கடந்த 20 ஆண்டுகளாக எவ்வித விபத்துமின்றிப் பணிபுரிந்ததற்காக, துணைவேந்தரவர்கள் அவருக்குத் தங்கப் பதக்கமும், நற்சான்றிதழும் வழங்கிப் பாராட்டிப் பேசினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர்களாகப் பணியாற்றிய அனைவருக்கும் திரு சோ.வடிவேலு அவர்கள் ஊர்தி ஒட்டுநராகப் பணியாற்றி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய விடுதலை விழாவில், தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் பெரும் திரளாகக் கலந்துகொண்டனர்.

## அமெரிக்காவில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியரின் நாடகம்




வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் அழைப்பின்பேரில் பேரவையின் 16ஆம் ஆண்டு மாநாட்டில் பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதியின் நந்தன் கதை நாடகம் தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத் துறைப் பேராசிரியர் முனைவர் மு.இராமசுவாமியின் நெறியாளுகையில் சூலை 5ஆம் நாள் நியூஜெர்ஸியில் நிகழ்ந்தது. மாநாட்டிற்கு வந்திருந்த அனைவராலும் இந்நாடகம் சிறப்பாகப் போற்றப்பட்டது. நியூஜெர்ஸியைத் தொடர்ந்து சிகாகோ (26.07.2003) மற்றும் ஜெயின்ட் பால்ஸ் (27.07.2003) ஆகிய இடங்களிலும் நிகழ்த்தப்பட்டு, அனைத்து இடங்களிலும் பார்வையாளரின் அமோக வரவேற்பைப் பெற்றது. நந்தன் கதை நாடகம். அந்நாடகம் பற்றி அமெரிக்காவிலிருந்து வெளிவரும் இணைய இதழான சூலை இதழில் இப்படி எழுதியிருந்தது. இ.பா.வின் மற்ற நாடகங்களைக் காட்டிலும் நடிக்கவும் பார்வையாளர்களுக்கு முன் அளிக்கவும் சிரமமானது நந்தன் கதை நாடகம். பல சவால்களை உள்ளடக்கியது. இந்தச் சவால்களை முழுமையாய் ஏற்று இராமசுவாமி படைத்திருக்கும் இந்த நாடகம் ஒரு புதிய ஆக்கமே...... ' இந்திய சாதீய மேலாண்மை வெளிப்படையான வன்முறையைக் கையாளாத போதும் எப்படி உள்ளார்ந்த ஒரு வன்முறை புழங்கி வந்திருக்கிறது என்பதும் இந்நாடகத்தில் மிக நுணுக்கமாய் வெளிப்படுகிறது. இந்நாடகத்தின் மூலம் நாடகாசிரியர், நாடக நெறியாளர், நாட்டார் நாடகத்தில் பங்குபெற்ற மற்றும் சாஸ்திரியக் கலைஞர்களும் முயற்சிக்கு ஒத்திசைவாக உதவிய தமிழ்ப் பல்கலைக்கழகமும் அனைவராலும் நன்றியுடன் பாராட்டப்பட்டன.

-மு.இராமசுவாமி

கண்ணகி திருநாள்

இலக்கியத்துறை

# சிலப்பதிகாரக் கருத்தரங்கம்

07.08.2003 வியாழக்கிழமை அன்று பூம்புகார்ப் பத்தினிக்கோட்டத்தில் கண்ணகி விழா நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகமும் பூம்புகார்ப் பத்தினிக் கோட்டமும் இணைந்து சிலப்பதிகாரக் கருத்தரங்கம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. புதிய நோக்கில் சிலப்பதிகாரம் என்ற தலைப்பில் இக்கருத்தரங்கம் 07.08.2003 முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை நடைபெற்றது. பூம்புகார்ப் பத்தினிக் கோட்ட அறங்காப்பாளர் திரு இரா.இராஜசேகரன் அவர்கள் கருத்தரங்கிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். தமிழ்ப் பண்பாட்டிற்கும், அறங்களுக்கும், மரபுகளுக்குமுரிய குறியீடாகப் பத்தினிக் காப்பியம் அமைவதை விரிவாக விளக்கினார். தொடர்ந்து நடைபெற்ற முதல் அமர்வுக்கு மொழிப்புலத் தலைவர் முனைவர் து.சீனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கி, சிலப்பதிகாரத்தின் இலக்கியப் புனைவு குறித்து உரையாற்றினார். இரண்டாம் அமர்வுக்கு தத்துவத் துறை இயக்குநர் முனைவர் க.பாஸ்கரன் அவர்கள் தலைமை தாங்கி சிலப்பதிகாரத்தின் மெய்யியல் குறித்து ஆய்வுரை வழங்கினார். கலைப்புலத் தலைவர் முனைவர் இராசு காளிதாசு அவர்கள், கண்ணகி சிற்பத்தின் பல்வேறு பரிமாணங்களை விளக்கினார். அகராதியியல் துறைத்தலைவர் முனைவர் பெ.மாதையன் அவர்கள் குடும்ப வாழ்வியல் சிலப்பதிகாரத்தில் எவ்வாறு சித்திரிக்கப்பெற்றுள்ளது என்பது குறித்து ஆய்வுக் கட்டுரை வழங்கினார். சிலப்பதிகாரத்தில் காணப்படும் பல்வேறு கலைகள் பற்றி நாட்டுப்புறவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஆ.இராமநாதன் அவர்கள் விரிவாக ஆய்வுரை வழங்கினார். சிலப்பதிகாரம் காட்டும் தமிழர் பண்பாடு-வரலாற்று மரபுகள் குறித்து ஓலைச்சுவடித்துறை இணைப்பேராசிரியர் முனைவர் வே.இரா.மாதவன் அவர்கள் ஆய்வுரை வழங்கினார். இறுதி ஆய்வுரையாக இசைத்துறைத்தலைவர் முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் சிலப்பதிகாரம் காட்டும் தமிழிசையின் மூலங்களைத் தக்க சான்றுகளுடன் விளக்கி ஆய்வுரை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகமும், பூம்புகார்ப் பத்தினிக் கோட்டமும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில் மாணவர்களும், பேராசிரியர்களும், நகர்ப்புற மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

-முனைவர் து.சீனிச்சாமி, மொழிப்புலத்தலைவர்

# முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| | ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|---|
| 1. | ந.வியாசராயர் கட்டடக்கலைத்துறை | தொட்டியம் பேரூராட்சி தலித் இன மக்களின் வீட்டமைவும் தெருவமைப்பும் | 01-08-2003 |
| 2. | சு.சாந்தி கட்டடக்கலைத்துறை | தஞ்சை மராட்டியர்களின் கட்டடக்கலை வரலாறு | 11-08-2003 |
| 3. | ஆர். கண்ணன் சமூக அறிவியல் துறை | பெண்பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி அளிப்பதில் பெற்றோர்களின் மனப்பாங்கு - ஓர் ஆய்வு | 13-08-2003 |
| 4. | சு.இராசவேலு கல்வெட்டியல்துறை | The Historical and Cultural Geography and Ethnography of Puddukkotai Region upto A.D.1800 | 14-08-2003 |
| 5. | கே.எம்.புவனேஸ்வரி இசைத்துறை | இசையரசு எம்.எம்.தண்டாயுதபாணி தேசிகரின் வாழ்க்கையும் இசைத்தொண்டுகளும் | 21-08-2003 |
| 6. | திருமதி அ.இலட்சுமிதத்தை புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் | சீவகசிந்தாமணி காட்டும் குடும்பம் | 22-08-2003 |
| 7. | கோ.சந்தமாரியம்மாள் இலக்கியத்துறை | கவிதை மரபில் ஆதியூர் அவதானி சரிதம் (பட்டுக்கோட்டை வட்டம்) | 20-08-2003 |
| 8. | நா.சீதாலட்சுமி சிற்பத்துறை | A Study on the Iconographical Importance of Ramaswamy Temple at Kumbakonam | 20-08-2003 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

## திணை அரங்கம்

ஆய்வுகள் மற்றும் படைப்புகள் அரங்கேறுவதற்குரிய களமாகத் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறை சார்பில் திணை அரங்கம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு திங்களிலும் முதலாவது மற்றும் மூன்றாவது வியாழக்கிழமைகளில் இவ்வரங்கம் மொழிப்புல அரங்கில் நிகழும். இவ்வரங்கின் தொடக்கவிழா 21-08-2003 அன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது. இத்தொடக்க விழாவிற்கு வந்திருந்தோரை இணைப்பேராசிரியர் முனைவர் வகுருநாதன் வரவேற்றுப் பேசினார்; திணை அரங்கத்தின் நோக்கங்களையும் செயல்பாடுகளையும் குறித்து இலக்கியத்துறைத் தலைவரும் - மொழிப்புலத் தலைவருமான முனைவர் து.சீனிச்சாமி விளக்கிக் கூறினார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னை மொழியியல் துறைத்தலைவரும் முன்னை மொழிப்புலத் தலைவருமான முனைவர் கி.அரங்கன் திணை அரங்கினைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். இவ்வரங்கில் முனைவர் தா.ரா.சுவரபிள்ளை பிரம்மசமாஜமும் வள்ளலாரும் என்ற தலைப்பிலும் முனைவர்பட்ட ஆய்வாளர் சோ.ஆனந்தி திணைக் கோட்பாட்டு நோக்கில் சிறுகதைகள் என்ற தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகள் படித்தனர். முனைவர் க.திலகவதி நன்றி உரை ஆற்றினார். விழா நிகழ்ச்சிகளை முனைவர் பெ.இராமலிங்கம் தொகுத்து வழங்கினார்.

-து.சீனிச்சாமி

விரைவில் வெளியிடவிருக்கும்

## புதிய நூல்கள்

1. அறிவியல் களஞ்சியம் தொகுதி-13
2. பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு
3. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி-5
4. உயிர்வேதியியல்
5. குழந்தை நலம் - தொகுதி 1
6. குழந்தை நலம் - தொகுதி 2
7. திருமுறைத் திருநெறி
8. தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி-2

**மறுபதிப்பு நூல்கள்**

1. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி-2
2. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-5
3. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-6

-இயக்குநர் (பொ), பதிப்புத்துறை

**பதிப்புத்துறை - இயக்குநர் (பொறுப்பு)**

12-08-2003 முற்பகல் முதல் நாட்டுப்புறவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஆ.இராமநாதன் அவர்கள் பதிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பு) பொறுப்பேற்றுள்ளார்.

2003-04ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும்

## புத்தொளிப் பயிற்சி வகுப்புகள்

| | துறை/பயிற்சி ஒருங்கிணைப்பாளர் | தலைப்பு | புத்தொளிப் பயிற்சி நடைபெறும் காலம் |
|---|---|---|---|
| 1. | அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை<br>முனைவர் கு.அண்ணாதுரை | அறிவியல் தமிழ் | 04.09.2003 முதல் 24.09.2003 முடிய |
| 2. | அயல்நாடுகளில் தமிழ்க் கல்வித்துறை<br>முனைவர் ஆ.கார்த்திகேயன் | அயல்நாடுகளில் இந்தியவியல் ஆய்வுகள்<br>(சிறப்பாகத் தமிழாய்வுகள்) | 24.09.2003 முதல் 15.10.2003 முடிய |
| 3. | இந்திய மொழிகள் பள்ளி<br>முனைவர் வே.சா.அருள்ராஜ் | தற்கால இந்திய மொழிகள், இலக்கியங்கள்<br>மற்றும் இலக்கணப் போக்குகள் | 16.10.2003 முதல் 05.11.2003 முடிய |
| 4. | சிற்பத்துறை<br>முனைவர் இராசு.காளிதாசு | இந்தியக்கலை வரலாற்று இயல் | 03.11.2003 முதல் 23.11.2003 முடிய |
| 5. | நாடகத்துறை<br>முனைவர் க.இரவிந்திரன் | பழந்தமிழ் இலக்கியங்களை நாடக<br>வடிவாக்குதல் | 06.11.2003 முதல் 26.11.2003 முடிய |
| 6. | மொழிபெயர்ப்புத்துறை<br>முனைவர் இராதாகிருட்டினன் | மொழிபெயர்ப்பும் தமிழ் இலக்கியமும்<br>ஓர் உலகப்பார்வை | 28.11.2003 முதல் 18.12.2003 முடிய |
| 7. | அரிய கையெழுத்துச்சுவடித்துறை<br>முனைவர் ம.சா.அறிவுடைநம்பி | சுவடிப்பதிப்பாசிரியர்களும் அவர்தம்<br>பதிப்பு முறைகளும் | 04.12.2003 முதல் 24.12.2003 முடிய |
| 8. | அகராதியியல் துறை<br>முனைவர் எச்.சித்திரபுத்திரன் | அகராதியியலும் சொற் பொருண்மையியலும் | 20.01.2004 முதல் 09.02.2004 முடிய |
| 9. | நாட்டுப்புறவியல் துறை<br>முனைவர் ஆ.இராமநாதன் | நாட்டுப்புறவியலும் பண்பாடும் | 04.02.2004 முதல் 24.02.2004 முடிய |
| 10. | சித்த மருத்துவத்துறை<br>முனைவர் மரு.சே.பிரேமா | கண்நோய்களுக்கான சித்த மருத்துவம் | 01.03.2004 முதல் 21.03.2004 முடிய |
| 11. | இலக்கியத்துறை<br>முனைவர் து.சீனிச்சாமி | சமூக-ஆன்மீக இயக்கங்களும் இந்திய<br>இலக்கியங்களும் சிறப்பு நிலையில் தமிழ் இலக்கியம் | 03.03.2004 முதல் 23.03.2004 முடிய |


இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

நிருவாக அலுவலர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

இயக்குநர்,
பதிப்புத்துறை / அச்சகம்,
தஞ்சாவூர்.

# தமிழ்ப் பல்கலைக் கழகம்
## தஞ்சாவூர்

## உதவிப்பதிவாளர் பணி ஒய்வு



தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆகஸ்ட் 1983இல் கண்காணிப்பாளராகப் பணியில் சேர்ந்து 1990ஆம் ஆண்டு உதவிப் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்று வயது முதிர்வின் காரணமாக 31.08.2003இல் பணி ஒய்வு பெற்ற திரு செ.பழனியப்பன், உதவிப் பதிவாளர் அவர்களின் பணி ஒய்வுப் பாராட்டு விழா 29.08.2003 அன்று மாலை 4.00 மணிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையேற்றுச் சிறப்பித்தார். தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் மருத்துவர் சே.பிரேமா மற்றும் கட்டடக்கலைத் துறைத் தலைவர் முனைவர் கோ. தெய்வநாயகம், பதிப்புத்துறை இயக்குநர்(பொ) முனைவர் ஆ.இராமநாதன் மற்றும் உதவிப் பதிவாளர்கள் திரு அ.வள்ளிநாயகம், திரு மு.அம்சத்உசேன் உள்ளிட்ட ஆசிரியர்/ அலுவலர்கள் திரு செ.பழனியப்பன் அவர்களின் பணியினைப் பாராட்டிப் பேசினார்கள். மாண்புமிகு துணைவேந்தரவர்கள் பணி ஒய்வு பெற்ற திரு செ.பழனியப்பன் அவர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக இலச்சினை பொறித்த கலைத்தட்டினை நினைவுப் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார்கள். திரு செ.பழனியப்பன், உதவிப்பதிவாளர், தனது ஏற்புரையில் தனது 20 ஆண்டு காலப் பல்கலைக்கழகப் பணியில் ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர் மற்றும் அலுவல்நிலைப் பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்தார். முன்னதாக 28.08.2003 அன்று பதிப்புத்துறை-அச்சகம் சார்பில் பதிப்புத்துறை அலுவலகத்தில் திரு செ.பழனியப்பன் அவர்களுக்குப் பதிப்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.இராமநாதன் முன்னிலையில் பாராட்டு விழா நடத்தப்பட்டு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. **

## நடைபெற்ற நிகழ்வுகள்

| | |
|---|---|
| 07.08.2003 | - இலக்கியத்துறை-பூம்புகார் பத்தினிக்கோட்டம் சிலப்பதிகாரக் கருத்தரங்கம் |
| 13.08.2003 | - ஆட்சிக்குழுக் கூட்டம் |
| 15.08.2003 | - இந்திய விடுதலை நாள் விழா |
| 21.08.2003 | - இலக்கியத்துறை-திணையரங்கம் |
| 28.08.2003 | - பயன்பாட்டுத் தமிழியல் முதுகலை வகுப்பு-தொடக்கவிழா |
| 29.08.2003 | - அறிவியல் தமிழ்வளர்ச்சித்துறை-சுற்றுச்சூழல் கருத்தரங்கு |

## நன்றி!

தஞ்சைத் திருக்குறள் பேரவை பின்வரும் முதுகலை மாணவர்கட்கு கல்வி உதவித்தொகை வழங்கி அரிய தொண்டாற்றியுள்ளது. திருக்குறள் பேரவைக்கு நன்றி.

| | | |
|---|---|---|
| க. இளையபெருமாள் | தி.இரமணி | பெ.ச.நீலா |
| ஜெ.குணசேகரன் | இரா.செல்வராஜ் | வ.ரேணுகா |
| ஆ.திருமுருகன் | மு.சுரேஷ் | ஜெ.ஜெயசித்ரா |

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்